(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்ரும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்ரும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

(இ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்ருவது அறிக்கை.

THIRU K. A. WAHAB : Sir, I rise to present the Third Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகி திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, மோட்டார் வண்டி உடமையாளர் பயணிகள் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"That leave be granted to introduce the Tamil Nadu Fleet Operators Stage Carriage (Acquisition) Amendment Bill, 1972".

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER: The Bill is introduced.

(6) தனியார் அலுவல்கள்.

(i) சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள்—சிறு இனும்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/72.)

திரு. ஆ. கு. சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் சிறு இனும்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் முறையே வழிமொழியப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சபையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்த மசோதா சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களையும், அந்த மசோதாவின் நோக்கங்களையும் சொல்வதற்கு முன் வருகிறேன். இந்த நாட்டில் ஒரு காலத்தில் ராஜாக்கள், மன்னர்கள், நிலங்களை எல்லாம் தனி நபர்களுக்கும், கோவில், மடம் போன்றவைகளுக்கும் இனுமாகக் கொடுத்ததன் மூலம் அந்த நிலங்கள் எல்லாம் சீரழிந்து சரியான முறையில் விவசாயம் நடைபெறாமல் உணவு உற்பத்திக்குப் பங்கம் ஏற்படுத்துகின்ற முறையில் இருந்து கொண்டு வந்தன. நாடு விடுதலை பெறுகின்ற சமயத்தில் லட்சக் கணக்கான இனும் விவசாயிகள், இனும் ஒழிப்பு மாத்திரமல்லாமல் ஜமீன் போன்ற ஒழிப்புகளையும் செய்து அந்த நிலங்களை எல்லாம் நிலத்திலே பாடுபடு கின்ற நிலத்தைப் பண்படுத்தி உழுது கொண்டிருக்கின்ற விவசாயி களுக்குக் கொடுக்க வேண்டுமென்று பெரும் கிளர்ச்சி செய்தார்கள். இந்தக் கிளர்ச்சி நாடு விடுதலை பெறுவதற்கு உதவியாகவே இருந்தது.